IN THE COURT OF THE SUBORDINATE JUDGE, METTUR
MCOP. No.108/2012 and MCOP 114/2012

Deposition of RW3 witness of Plaintiff/Petitioner/Defendant/Respondent solemnly affirmed by Bench Clerk in OP Section of this court in accordance with the provisions of Oaths Act 1969 (Act 44 of 1969) on **25.10.2024.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | **:** | சு.சங்கீதா | **Caste** | : | |
| **W/o.** | **:** | சேகர் | **Calling** | : | |
| **Village** | **:** | | **Religion** | : | |
| **Taluk** | **:** | | **Age** | : | |

முதல் விசாரணை :–

நான் தற்போது மேட்டூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து வட்டார போக்குவரத்து அலுவலர் அவர்களுக்கு வரப்பெற்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியமளிக்க வந்துள்ளேன். நீதிமன்ற அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணத்தை கொண்டு வந்துள்ளேன். 14.09.2011 அன்று ஏற்பட்ட விபத்தில் தொடர்புடைய TN 39 AH 6093 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கையின் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். மேற்படி ஆவணம் **எ.ம.சா.ஆ. 3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த நபரான சின்னபையன் என்பவர் ஓட்டுநர் உரிமத்தை சமர்ப்பிக்கவில்லை என்று மேற்படி ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி சின்னபையன் என்பவருக்கு எங்கள் அலுவலகத்தில் இருந்து ஓட்டுநர் உரிமம் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளதா என்றால் அலுவலக பதிவேடுகளில் பார்த்த வகையில் அவருக்கு எங்கள் அலுவலகத்தில் இருந்து ஓட்டுநர் உரிமம் வழங்கப்படவில்லை என்று தெரியவந்தது. ஓட்டுநர் உரிமம் குறித்து கணினியில் பார்க்கவேண்டுமானால் ஓட்டுநர் உரிம எண் மற்றும் ஓட்டுநர் உரிமம் வழங்கப்பட்ட தேதி மற்றும் ஓட்டுநரின் பிறந்த தேதி இருந்தால் தான் பார்க்க முடியும்.

**2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை –இல்லை**

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

TN 39 AH 6093 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வுக்கு உட்படுத்திய சமயத்தில் மேற்படி வாகனத்திற்குரிய Oriental Insurance நிறுவனத்தின் காப்பீடு நிலுவையில் இருந்தது என்றால் மோட்டார் வாகன ஆய்வறிக்கையின் படி மேற்படி இருசக்கர வாகனத்திற்குரிய காப்பீடு 30.01.2012 வரை நிலுவையில் இருந்தது. மேற்படி இருசக்கர வாகனத்தை ஓட்டி சென்ற நபர் தர்மபுரி மாவட்டத்தில் ஓட்டுநர் உரிமம் பெற்றிருந்தால் எங்கள் அலுவலகத்தில் அது பற்றி தெரிந்து கொள்ள முடியாது என்றால் சரியல்ல. ஓட்டுநர் உரிம எண் மற்றும் ஓட்டுநர் பிறந்த தேதி இருந்தால் எங்கள் அலுவலகத்திலும் அது குறித்து தெரிந்து கொள்ளலாம்.

**மறுவிசாரணை** - இல்லை

ஓம்/—சு.சங்கீதா

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஓம்/—எல்.கமலகண்ணன்,
சார்பு நீதிபதி,
மேட்டூர்.